# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பிரதான கட்டிடத்திற்கு முன்மொழியப்பட்ட புனரமைப்புப்பணி**

1. இல. 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சார்பில், திணைக்கள பெறுகைக் குழு தலைவர் (மேல்நிலை), இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட புனரமைப்புப் பணிகளுக்காக, தகுதியான மற்றும் தகைமை பெற்ற விலைமனுதாரர்களிடமிருந்து கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

   **வேலை விடயப்பரப்புகள்**

   இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பிரதான கட்டிடத்திற்கு முன்மொழியப்பட்ட புனரமைப்புப் பணி

   பிரதான கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகளில், கூரைத் தளத்தின் (roof terrace) மீதுள்ள தற்போதைய கூரை மூடுகையை அகற்றி, புதிய உடற்பயிற்சிக் கூடம் மற்றும் பதிவேட்டு அறையை நிர்மாணித்தல் என்பன உள்ளடங்குகின்றன. இவை எடை குறைந்த தொகுதிச் சுவர்கள் (light-weight block walls), அலுமினியத் தடுப்புப் பிரிவுகள் (aluminum partitions), அலுமினிய ஜன்னல்கள், உருக்கு கூரை அமைப்பைக் கொண்ட (steel roof structure) நாக அலுமினியத் தகட்டுக் கூரை (Zn aluminum sheet roof), அஸ்பெஸ்டஸ் அல்லாத சீமெந்து ஃபைபர் தகடு கூரை உட்சுவர் (ceiling), சுகாதாரப் பொருத்தல்கள் கூடிய மாபில் பதிக்கப்பட்ட மலசலகூடத் தொகுதி, தற்போதுள்ள நீர் தாங்கிகளை மாற்றுதல் மற்றும் முன்புற முகப்பு கூரைச் சுவர்ப் பகுதியின் (front porch roof slab) நீர்ப் புகாத் தடுப்புப் பணிகள் (waterproofing works) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

   சிற்றுண்டிச்சாலைக் கட்டிடத்தின் புனரமைப்புப் பணிகளில், புதிய குழாய் அமைப்புப் பணிகள் (plumbing works) மற்றும் சுகாதாரப் பொருட்களைப் பொருத்துதல் (sanitary fittings) உள்ளடங்கலாக, 2 ஆவது மாடியில் பெண்களுக்கான புதிய மலசலகூடத் தொகுதியை அமைத்தல் ஆகியவை இதனுள் அடங்கும்.

   இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 08 இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு வளாகத்தில் அமைந்துள்ளது.

   கட்டுமான கால எல்லை 270 நாட்கள்

   மொத்த மதிப்பிடப்பட்ட செலவு 83 மில்லியன் ரூபா ஆகும். (VAT வரி தவிர்த்து)

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுகோரல் நடைமுறையின் படி விலைமனுக்கள் மேற்கொள்ளப்படும்.

3. ஒப்பந்தத்தை வழங்க தகுதி பெற்ற சிறந்த விலைமனுதாரர் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்படாதவராக இருத்தல் வேண்டும். அத்துடன் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

   கட்டுமானத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பதிவு பெற்றிருக்க வேண்டும்

   தேவையான பதிவு தகைமைகள்

   சிறப்புத் துறை : கட்டிடங்கள்

   தரம் : பிரதான ஒப்பந்தக்காரர்கள் – C5 / C4 / C3 (உறுப்புரிமையானது விலைமனு முடிவடையும் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் இருத்தல் வேண்டும்)

4. ஒப்பந்த வழங்கீட்டிற்கான தகைமையை பெற்றுக் கொள்ள தேவையான தகைமைகள்
   - சென்ற ஐந்து வருட காலத்திற்குள் மேற்கொண்ட கட்டுமான நடவடிக்கைகளில் சாதாரண வருடாந்த பெறுமதி ஆகக் குறைந்தது 133.0 மில்லியன் ரூபாவாக இருக்க வேண்டும்.
   - இந்த செயற்றிட்டத்திற்கு மாத்திரம் தேவையான குறைந்த பட்ச நீர்மை சொத்து (Liquid Assets) மற்றும் / அல்லது கடன் வசதி பெறுமதி 28.0 மில்லியன் ரூபாவாக இருக்க வேண்டும்.
   - சென்ற 10 வருட காலங்களினுள் இப்பணிக்கு ஒத்த தன்மை மற்றும் சிக்கல்தன்மை கொண்ட ஒரு ஒப்பந்தத்தின் கீழ் (குறைந்தபட்சம் 50% பூரணப்படுத்தியுள்ள) 67.0 மில்லியன் ரூபா அல்லது அதனை விட அதிக பெறுமதியான கட்டுமான நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கான அனுபவம் காணப்பட வேண்டும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பணிப்பாளர் - நிர்வாகம் மற்றும் கூட்டுறவு விவகாரங்கள் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு – 08 இல் பெற்றுக் கொள்ள முடியும். 2026.09.17 தொடக்கம் 2026.10.06 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 தொடக்கம் பி.ப.03.00 வரை இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு – 08 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் நிர்வாகம் மற்றும் கூட்டுறவு விவகாரங்கள் பிரிவு காரியாலயத்தில் விலைமனு ஆவணங்களை பரிசீலனை செய்யலாம்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், 2026.09.17 தொடக்கம் 2026.10.06 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 தொடக்கம் பி.ப.2.30 வரையான காலத்தினுள் ரூ.12,500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை பணமாக செலுத்தி இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு – 08 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நிர்வாக மற்றும் கூட்டுறவு அலுவல்கள் இற்கு எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை முன்வைத்து, ஆங்கில மொழியில் அமைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் ஆவணம் ஒன்றை பெற்றுக் கொள்ள முடியும்.

7. விலைமனு 2026.10.07 ஆம் திகதி பி.ப.2.00 க்கு அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல.276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு – 08 என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் கையளிக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் காலம் நிறைவு பெற்ற உடனே கலந்து கொள்ள விருப்பம் தெரிவிக்கின்ற விலைமனுதாரர்களுடைய பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

8. எல்லா விலைமனுவுடன் ரூ.800,000.00 விலைமனு பிணை வைப்பொன்று முன்வைக்க வேண்டும். அந்த பிணை வைப்பு 2026.10.07 தொடக்கம் 2027.02.03 வரை செல்லுடியாகும். (விலைமனு செல்லுபடியாகும் காலத்திற்கு அப்பால் 28 தினங்கள் வரை)

9. விலைமனு முன்னைய கூட்டம் 2026.09.29 திகதி மு.ப.11.00 க்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**இல.276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு - 08**
**2026.09.16**